**MANNAR THIRUMALAI NAICKER COLLEGE (Autonomous)**

**PASUMALAI, MADURAI – 625004.**

**ALUMNI ASSOCIATION**

**NATIONAL SERVICE SCHEME**
**REPORT ON "COVID 19 RELIEF DISTRIBBUTION"**

1.Name of the programme : COVID 19 RELIEF DISTRIBUTION

2.Date of the Programme : 28th May 2020

3.Organizer's Name : Dr.R.Alagesan
NSS Programme officer
Dr.P.Anbuoli
NSS Programme officer

4.Number of Beneficiaries : 700




[redacted]

Address by Prof .Dr.N.Krishnan, Hon’ble Vice –Chancellor, Madurai Kamaraj University, Madurai and Distributing Covid-19 relief to the adopted villagers.

## உச்சப்பட்டியில் மன்னர் கல்லூரி முன்னாள் மாணவர் சங்கத்தின் சார்பில்

# 700 குடும்பங்களுக்கு ரூ.7லட்சம் மதிப்பிலான நிவாரண பொருட்கள்: துணைவேந்தர் எம்.கிருஷ்ணன் வழங்கினார்



**திருமங்கலம், மே 29-**

மதுரை மாவட்டம் திருமங்கலம் அருகேயுள்ள உச்சப்பட்டி கிராமத்திற்கு உதவிகள் செய்வதற்கென தத்தெடுத்துள்ள மன்னர் கல்லூரி முன்னாள் மாணவர் சங்கத்தின் சார்பில் அங்கு வசித்திடும் 700க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு ரூ.7லட்சம் மதிப்பிலான அரிசி, மளிகை சாமான்கள் உள்ளிட்ட கொரோனா நிவாரண உதவி பொருட்களை மதுரை காமராஜர் பல்கலைக்கழக துணைவேந்தர் டாக்டர்.எம்.கிருஷ்ணன் வழங்கினார்.

திருமங்கலம் அருகேயுள்ள உச்சப்பட்டி கிராமத்தில் 700க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றனர்.இங்கு வசித்திடும் பெரும்பாலானோர் விவசாய தொழில் செய்து வருகின்றனர். இந்நிலையில் கொரோனா தடுப்பு ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டு 60நாட்களுக்கு மேலாகி விட்டதால் உச்சப்பட்டி கிராமத்தைச் சேர்ந்தவர்கள் வேலை வாய்ப்புகளை இழந்து தவித்து வந்தனர்.இதனையறிந்த பசுமலை மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரியின் மன்னர் முன்னாள் மாணவர் சங்கத்தினர் உச்சப்பட்டி கிராமத்தை நலத்திட்ட உதவிகள் வழங்கிடுவதற்காக தத்தெடுத்துக் கொண்டனர்இதனை தொ டர்ந்து உச்சப்பட்டி கிரமத்தில் வசித்திடும் 700க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு ரூ7லட்சம் மதிப்பிலான கொரோனா நிவாரண பொருட்கள் வழங்கிடும் நிகழ்ச்சி நேற்று காலை உச்சப்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் சமூக இடைவெளியுடன் சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரியின் செயலாளர் என்.விஜயராகவன் தலைமை வகித்தார்.உச்சப்பட்டி ஊராட்சி மன்ற தலைவர் பிச்சையம்மாள், மன்னர் முன்னாள் மாணவர் சங்கத்தின் தலைவர் எஸ்.முரளிதரன், திருமங்கலம் தாசில்தார் தனலட்சுமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்நிகழ்ச்சியில் மதுரை காமராஜர் பல்கலைக்கழக துணைவேந்தர் டாக்டர். எம்.கிருஷ்ணன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உச்சப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த 700குடும்பங்களுக்கு ரூ7லட்சம் மதிப்பிலான கொரோனா நிவாரண உதவி பொருட்களை வழங்கினார்.

மேலும் பல்கலை ஆட்சி மன்ற குழு உறுப்பினர் டாக்டர். எஸ்.பாரிபரமேஸ்வரன், கல்லூரி உதவி செயலாளர் ராஜேந்திரபாபு,கல்லூரி முதல்வர்(பொ) தேன்பாண்டியன் மற்றும் கல்லூரி நிர்வாகிகள், மன்னர் முன்னாள் மாணவர் சங்க நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.நிறைவாக பள்ளியின் தலைமை ஆசிரியை சாந்தி நன்றி கூறினார்.

News Paper Cutting